வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 21.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

உலக அளவில் யோகா பயில்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், யோகாவின் பலன்களை மக்கள் அங்கீகரித்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

சர்வதேச யோகா தினமான இன்று ஸ்ரீநகரில் நடைபெற்ற விழாவில், பொது யோகா பயிற்சி அமர்வில் பிரதமர் கலந்து கொண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டார்.

புதுச்சேரியில் கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று காலை நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

கள்ளக் குறிச்சி விஷச் சாராய சம்பவத்தில், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், மாநில சட்டமன்றத்தில் உறுதி அளித்துள்ளார்.

10-ஆவது சர்வதேச யோகா தினம், இன்று உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறது. ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ஶ்ரீநகரில், ஷேரே-காஷ்மீர் சர்வதேச மாநாட்டு மையத்தில் இன்று காலை நடைபெற்ற பிரதான விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொண்டு, சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களுக்கு தலைமை ஏற்றார். ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, மத்திய அமைச்சர் திரு பிரதாப்ராவ் கண்பத்ராவ் ஜாதவ் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். உலக அளவிலான யோகாவின் தாக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு நாடுகளுக்கான இந்திய தூதரகங்களும் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களில் தங்களை இணைத்துக் கொண்டன.

ஶ்ரீநகரில், பிரதான விழாவில் இடம் பெற்ற பொது யோகா பயிற்சி அமர்விலும், பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டார். உடல்-மன-ஆன்மிக மேம்பாட்டில் யோகாவின் முக்கியத் துவம் குறித்து பிரதமர் இவ்விழாவில் பேசுகையில், உலக அளவில் யோகா பயில்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், யோகாவின் பலன்களை மக்கள் அங்கீகரித்து வருவதாகவும் கூறினார். யோகாவை பிரபலப்படுத்த கடந்த 10 ஆண்டுகளில் அரசு மேற்கொண்ட

முயற்சிகள் காரணமாக, புதிய யோகா பொருளாதாரம் ஒன்றே உருவாகி இருப்பதாகவும், யோகாவின் பிறப்பிடமான இந்தியாவிலேயே யோகா கற்க, வெளிநாட்டினர் அதிகம் விரும்புவதால், யோகா சுற்றுலா வளர்ச்சி அடைந்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். நாட்டில் யோகா பயிற்சி முகாம்களும், யோகா வசதியுடன் கூடிய ஓய்வு இல்லங்கள் மற்றும் விடுதிகள் அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார். இதனால் இளைஞர்களுக்கான புதிய வேலை வாய்ப்புகளுக்கு வழி ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு சர்வதேச யோகா தினம், நமக்கும் சமுதாயத்திற்குமான யோகா என்ற மையக் கருத்து அடிப்படையில் கொண்டாடப்படுவதை பிரதமர் சுட்டிக்காட்டி, உலக நன்மைக்கான சக்தி வாய்ந்த கருவியாகவே, உலகம் யோகாவை பார்ப்பதாகவும், கடந்த காலத்தின் சுமைகளைக் களைந்துவிட்டு, நிகழ்காலத்தில் வாழ, யோகா பெருமளவில் உதவும் என்றும் கூறினார்.

யோகாவினால் அனைத்து மக்களும் அதிகப்பட்சப் பலன் பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் கிராமப்புறங்களிலும் யோகாவை பிரபலமாக்க, பிரதமர் திரு நரேந்திர மோடி கிராம பஞ்சாயத்து தலைவர்களுக்கு கடிதம் எழுதி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

அமைச்சர்கள்

டெல்லி உட்பட நாடு முழுவதும் இன்று நடைபெற்ற சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களில் மத்திய அமைச்சர்கள் மற்றும் உயர்நிலை அதிகாரிகள் கலந்து கொண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டனர். மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், புதுடெல்லி யோகி தோட்டத்தில், துறைச் செயலர் திரு சஞ்சய் ஜாஜு- வுடன் இணைந்து யோகா பயிற்சி மேற்கொண்டார். தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கோவை ராமகிருஷ்ணா கல்வி நிலையத்தில், யோகா அமர்வில் கலந்து கொண்டார். மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டா, டெல்லி யமுனா விளையாட்டு வளாகத்திலும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, டெல்லி மில்லேனியம் பூங்காவிலும், மத்திய அமைச்சர் திரு ஜிதேந்திர சிங், பிரதமரின் முதன்மைச் செயலர் திரு பி கே மிஸ்ரா உள்ளிட்டோர் பிரதமர் அலுவலகத்திலும் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர். திரு மன்சுக் மாண்டவியா, திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும் தலைநகரின் பல்வேறு இடங்களில் யோகா அமர்வுகளில் கலந்து கொண்டனர். உத்தரபிரதேஷ் மாநிலம் மதுராவில், பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் யோகா அமர்வில் கலந்து கொண்டார். மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் உள்ள

இந்திராகாந்தி தேசிய வனவளக் கல்லூரியில், பயிற்சி அதிகாரிகளுடன் இணைந்து, யோகா அமர்வில் பங்கேற்றார். தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் கீழ் மாத்ரு வனம் அமைக்கப்படுவதன் தொடக்கமாக மரக் கன்று ஒன்றையும் அவர் நட்டு வைத்தார்.

*மகளிர் இயக்கம்*

அங்கன்வாடி மற்றும் ஆஷா பணியாளர்கள் மூலம் பெண்களைத் தேடிச் சென்று, மகளிர் அதிகாரப் பங்கேற்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான, 100 நாள் சிறப்பு இயக்கத்தை, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர், புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். பெண்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அரசு அமல்படுத்தி வருகின்ற போதிலும் இத்திட்டங்கள் பற்றிய பெண்களுக்கு தெரிவதில்லை என்றும், இதனால் திட்டப் பலன்களை பெற முடியாத நிலையில் பெண்கள் இருப்பதை மாற்றுதல் அவசியம் என்றும் அமைச்சர் கூறினார். விழிப்புணர்வு இயக்கத்தின் 100 நாள் காலம் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, இயக்கத்தின் முன்னேற்றம், அவ்வப்போது மறு ஆய்வு செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார். இயக்கத்தின் மூலம் திரட்டப்படும் தரவுகள், அடுத்த 5 ஆண்டுகளில் பெண்களுக்கான நலத் திட்டங்களை தயாரிப்பதில் உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

புதுச்சேரி- யோகா

புதுச்சேரியில் சுற்றுலா, கல்வி, ஆயுஷ் உள்ளிட்ட துறைகள் சார்பில், கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று காலை நடைபெற்ற 10-ஆவது சர்வதேச யோகா தின விழாவை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார். 3 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் வல்லுனர்கள், பெருந்திரள் யோகா செயல் விளக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பல்வேறு யோகாசனங்களை செய்து காண்பித்தனர். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு ராமலிங்கம், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், மற்றும் உயர் அதிகாரிகளும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி இவ்விழாவில் பேசுகையில் மனதின் கட்டுப்பாட்டில் உடலைக் கொண்டு வர யோகாவால் மட்டுமே முடியும் என்றார். யோகாவை கலையாக நினைத்து, சிரமம் பாராமல் பயிற்சியில் ஈடுபட்டால் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். நமது கோவில்களில் சிற்பங்கள் யோகாசன நிலையில் அமைந்திருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். யோகாவை சர்வதேச அளவில் பிரசித்திப் பெற செய்தவர் பிரதமர் திரு நரேந்திர மோடி என்றும் அவர் கூறினார்.

(வாய்ஸ்)

புதுச்சேரி அரசின் வேளாண் துறை சார்பில் சிறுதானியங்கள் பற்றிய கண்காட்சியும், கல்வித் துறை சார்பில் யோகா பற்றிய விளக்க அரங்கம் சர்வதேச யோகா தின விழாவில் இடம் பெற்றன. விழாவின் போது சிறுதானியங்களின் நன்மை குறித்தும் மாணவர்கள் நாடகம் நடித்துக் காட்டினர்.

*ஸ்டாலின்*

கள்ளக் குறிச்சி விஷச் சாராய சம்பவத்தில், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று மாநில சட்டமன்றத்தில் உறுதி அளித்துள்ளார். சம்பவம் தொடர்பான ஒரு நபர் விசாரணைக் கமிஷனின் அறிக்கை மீது, அரசு 2 நாட்களில் நடவடிக்கை எடுக்கும் என்று அவர் தெரிவித்தார். சம்பவத்தில் 1 அல்லது 2 பெற்றோர்களையும் இழந்த குழந்தைகளின் கல்விச் செலவை அரசே ஏற்கும் என்றும், 18 வயது ஆனவுடன் வட்டியுடன் சேர்த்து இவர்களுக்கு கிடைக்கும் வகையில் தலா 5 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். சம்பந்தப்பட்ட குழந்தைகளை பராமரிக்கும் பாதுகாவலர்களுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், அவர் தெரிவித்தார். விஷச் சாராய சம்பவத்தைத் தொடர்ந்து கள்ளக் குறிச்சி மாவட்டத்தில் அதிகாரிகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை முதலமைச்சர் பட்டியலிட்டுக் காட்டினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்க, உடனடியாக 5 மாவட்டங்களில் இருந்து 57 டாக்டர்கள் கள்ளக் குறிச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இவர்கள் கள்ளக் குறிச்சி அரசு மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள 161 டாக்டர்களுடன் இணைந்து தேவையான மருத்துவ உதவிகளை வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார். சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் கோவிந்தராஜிடம் இருந்து, 200 லிட்டர் மெத்தனால் கைப்பற்றப் பட்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் தெரிவித்தார். இந்த மெத்தனால், புதுச்சேரியில் இருந்து கொண்டு வரப்பட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

*கள்ளக்குறிச்சி*

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விஷச் சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட 165 பேரில், உயிர் இழந்தோர் எண்ணிக்கை, 47-ஆக அதிகரித்துள்ளது. மேலும் 118 பேர், பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சையில் உள்ளவர்களில் 6 பேர் மோசமான நிலையில் இருப்பதாக, மாவட்ட ஆட்சியர் திரு எம் எஸ் பிரஷாந்த் இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். 68 பேர், சிகிச்சைக்கு பின்னர் உடல் நிலை தேறி வருவதாகவும் அவர் கூறினார். இதற்கிடையே, விஷச் சாராய

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 4 பேரும், 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

*ஆகாஷ்வாணி நம்பிக்கை*

நாட்டு மக்களின் நம்பிக்கைக்குரிய செய்திகளில் ஒன்றாக, ஆகாஷ்வாணி செய்திகள் திகழ்வதை, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராய்டர்ஸ் இதழியல் கழகத்தின், நடப்பாண்டிற்கான டிஜிட்டல் நியூஸ் அறிக்கை, உறுதிப்படுத்தி உள்ளது. நாட்டின் இதழியல் சூழல் பற்றிய இந்த, வருடாந்திர அறிக்கையில், ஆகாஷ்வாணி செய்திகள், இதர ஊடகங்களை விடக் கணிசமான அளவில், நம்பிக்கை மதிப்பெண் பெற்றுள்ளன. எல்லா சூழ்நிலைகளிலும் உண்மையை மட்டுமே ஒலிபரப்புவதில் ஆகாஷ்வாணிக்கு உள்ள கடமைப் பற்றுக்கு, இதுவே சான்றாகும் என்று, பிரசார் பாரதி தலைவர் திரு நவநீத் சேகல் கூறி உள்ளார்.

*நிலக்கரி-ஏலம்*

நிலக்கரிச் சுரங்கங்களில், வர்த்தக ரீதியில் நிலக்கரி வெட்டி எடுக்கும் உரிமங்களுக்கான 10-ஆம் சுற்று ஏல நடைமுறைகளை, மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு கிஷன்ரெட்டி, ஐதராபாத்தில் இன்று தொடக்கி வைத்தார். ஏல நடைமுறைகள் முற்றிலும் வெளிப்படையான முறையில் நடைபெறும் என்றும், 5 டிரில்லியன்

பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்துவதில் இந்த ஏலம் மிக முக்கிய பங்களிக்கும் என தாம் நம்புவதாகவும் அவர் கூறினார். நடப்பு 10-ஆவது சுற்றில் மொத்தம் 67 நிலக்கரிச் சுரங்கங்கள் ஏலம் விடப்படுவதாகவும், இதனால் உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி அதிகரித்து, நாட்டின் எரிசக்தி மேம்படும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நிலக்கரிச் சுரங்கங்களுக்கான ஏல நடைமுறைகள் டெல்லிக்கு வெளியே தொடக்கி வைக்கப்படுவது, இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

*அசீனா*

பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா 2 நாள் பயணமாக, இன்று புதுடெல்லி வருகிறார். அவர் இந்தப் பயணத்தின் போது பிரதமர் திரு நரேந்திர மோடியுடன், இருதரப்பு ஆலோசனை மேற்கொள்வார். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கரையும் அவர் சந்திக்கிறார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

உலக அளவில் யோகா பயில்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், யோகாவின் பலன்களை மக்கள் அங்கீகரித்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

சர்வதேச யோகா தினமான இன்று ஸ்ரீநகரில் நடைபெற்ற விழாவில், பொது யோகா பயிற்சி அமர்வில் பிரதமர் கலந்து கொண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டார்.

புதுச்சேரியில் கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று காலை நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

கள்ளக் குறிச்சி விஷச் சாராய சம்பவத்தில், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், மாநில சட்டமன்றத்தில் உறுதி அளித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------